Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0- / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Est: 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

மாலை 19 } ஈரோடு 6-4-1946 பங்குனிமீ 24உ { மலர் 26

## மாணவமணிகளே!

சென்ற அறிவிப்புபடி 15-4-46 திங்கள் முதல் மாணவர் பயிற்சிக்கூடம் ஈரோடு வெங்கட்டநாயக்கர் தர்ம சத்திரத்தில் ஆரம்பமாகும். 15-4-46ல் வரக்கூடிய மாணவர்களுக்கு இப்பொழுது அழைப்பு அனுப்பப்படுகிறது. மாணவரல்லாத ஒருசில இளைஞர்களுக்கும், பேச்சாளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்படுகிறது.

அழைப்புபெற்ற மாணவர்களும், பிறரும் குறிப்பிட்ட நாளில் வந்து சேர வேண்டுகிறோம்.

ஏற்கனவே அறிவித்துள்ளபடி தோழர்கள் படுக்கை, போதிய உடை முதலியவைகளோடு வரவேண்டுகிறோம்.

பிரச்சாரத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் தோழர்கள் பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு பிரித்து அனுப்பப்படுவார்கள்.

பயிற்சிக்கூடம் குறைந்தது ஒரு மாத காலம் நடைபெறலாம். வேண்டுகோள் அனுப்பியுள்ள தோழர்களை அவர்கள் ஓய்வுபெறும் நாளையொட்டி பகுதிகளாகப் பிரித்து அழைப்பு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு வாரத்திற்குப் பயிற்சி நடைபெறலாம். பெரியார் ஈ. வெ. ரா., தோழர்கள் டி.பி. வேதாசலம், சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், எ. சித்தையன் முதலியோர் பயிற்சி தருவார்கள்.

செயலாளர்,
திராவிட மாணவர் பிரசாரக்கழகம்,
கச்சேரிவீதி, ஈரோடு.

## கூடலூர் திராவிடர் கழக ஆண்டுவிழா

31-3-46 ஞாயிறன்று கூடலூர் O.T. எஸ். பி. ஜி. உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் கூடலூர் O. T. திராவிடர் கழக ஆண்டுவிழா சென்னை நகர திராவிடர் கழகத் தலைவர் தோழர் C. D. T. அரசு அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை 8மணிக்கு நூற்றுக்கு மேற்பட்ட கறுப்புச்சட்டைத் தொண்டர்கள் இரயிலடி வந்து வாழ்த்தொலிகளோடு பெரியாரை வரவேற்றனர். காலை 9-30 மணிக்கு தலைவர்களை காரில் அமரவைத்து தொண்டர்களும், பொதுமக்களும் ஆயிரத்திற்கு மேல் கூடி ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். சிறிது மயக்கம் காரணமாக ஆண்டுவிழா நிகழ்ச்சியில் பெரியார் கலந்துகொள்ள முடியாது போயிற்று. தோழியர் இராமாமிர்தத்தம்மையார் கொடியேற்றுவித்தார்கள். தோழர் காஞ்சி கலியாணம் அவர்கள் ஆண்டுவிழாவை ஆரம்பித்து வைத்தார்கள். தலைவர் தமது தலைமையுரையில் திராவிடநாட்டுப் பிரிவினையின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்கள்.

பிற்பகல் நிகழ்ச்சி மாலை 3-30 மணிக்கு தொடங்கியது. தோழர் வ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் கறுப்புச்சட்டைப் படையின் அவசியத்தை விளக்கி அரிய சொற்பொழிவாற்றினார். வீரமணி மூடநம்பிக்கை என்பதுபற்றி பேசியபின் கூடலூர் திராவிடர் கழகத்தலைவர் வி. கே. எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

அன்று மாலை 6மணிக்கு மஞ்சக்குப்பம் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது சுமார் 5000 மக்களுக்குமேல் குழுமியிருந்தனர். தோழர் C.D.T. அரசு தலைமைதாங்கினார். பெரியார் அவர்கள் பெருத்த கைதட்டலுக்கிடையே எழுந்து சுமார் 2½மணி நேரம் திராவிடர் நிலைபற்றி மிக விளக்கமாகப் பேசினார்கள். கூட்டம் இறுதிவரை மிக அமைதியாக நடைபெற்று, தலைவர் முடிவுரைக்குப்பின் பெரியார் வாழ்க, திராவிடநாடு திராவிடருக்கே என்ற வாழ்த்தொலிகளோடு இனிது முடிந்தது. மஞ்சை நகர் திராவிடர் கழகத்தார் பெரியாருக்கு ஓர் வாழ்த்துப்பா வாசித்தளித்தனர்.

ஊர்வலத்தின்போழுது முஸ்லிம் தெருவில் தோழர் இ. அப்துல் சமது அவர்கள் 101 கால்ணாகொண்ட பணமுடிப்பை பெரியாருக்கு அளித்தார்.

31-3-46ல் விருதுநகர் திராவிடர் கழகநிர்வாகஸ்தர்கள் கூட்டத்தில் புதுநிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

## பெண்ணாடத்தில் பெரியார்

2-4-46 செவ்வாய் மாலை 5மணிக்கு விருத்தாச்சலத்திற்கடுத்த பெண்ணாடத்தில் ரேடியோ மைதானத்தில் திராவிடர்களின் மாபெரும் பொதுக்கூட்டம் தோழர் இராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் பத்தாயிரம் மக்களுக்கு வந்திருந்தனர். பெரியாரைக்கண்டு களிக்கவும், அவர் பேச்சைக் கேட்டின்புறவும் சுற்றுக் கிராமங்களிலிருந்தும், சேரிகளிலிருந்தும் பல்லாயிரக்கணக்கில் மக்கள் வந்து குழுமியிருந்தனர். தோழர் முருகேசன் திராவிடர் கழகக்கொடியை யேற்றுவித்தார். பெரியார் அவர்கள் மக்களின் பெரு ஆரவாரத்துக்கிடையே எழுந்து "திராவிடர் நிலை" என்பதுபற்றி சுமார் 3மணிநேரம் அரிய சொற்பொழிவாற்றினார்கள். தோழர்கள் நன்னன், முத்தழகன் ஆகியோர் பேசியபின் தலைவர் முடிவுரை கூறினார். நன்றிகூறலோடு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தை சிறப்பாக நடத்த விருத்தாசலம் முனுசாமி, பெண்ணாடம் பெரியதம்பி ஆகியோர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர்.

கூட்டம் ஆரம்பமாகுமுன் தோழர் இராமையா—முத்தியாள் வாழ்க்கை ஒப்பந்தத்தை பெரியார் நடத்திவைத்தார்கள்.

## செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்

24-3-46ல் திருச்செங்கோட்டில் தோழர் ஆர். கே. ஆறுமுகம் அவர்கள் மாளிகையில் தோழர் என். கே. பி. வேல் அவர்களுக்கு சொந்தமான செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோரை தோழர் இராசகோபால்-பி. ஏ., அவர்கள் திறந்து வைத்தார்கள். புள்ளிகார் மில்ஸ் தோழர் ஆர். வி. பொன்னுசாமி அவர்கள் தலைமை வகித்தார். தோழர் ஆ. திராவிடமணி பி.ஏ., செல்வம் படத்தைத் திறந்து வைத்தார். கைத்தொழிலும் நமது கடமையும் என்பதுபற்றி தோழர் எ. சித்தையன் சொற்பொழிவாற்றினார். தோழர் என். கே. பி. வேல் நன்றி கூறினார். 'குடி அரசு'க்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

# கழகம் அமைத்தார்கள்

24-3-46ல் திருச்செங்கோடு தாலுக்கா குமரமங்கலத்தில் தோழர்கள் இரங்கசாமி தலைவராகவும், முனியப்பன் செயலாளராகவும் கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

o o

27-3-46ல் தஞ்சை ஜில்லா மடப்புரம் பாக்கத்தில் தோழர் ரா. கணேசன் அவர்களைத் தலைவராகக்கொண்ட செல்வம் வாசகசாலை நிறுவப்பட்டு சுமார் 60 பேருக்கு திராவிடர் கழக அங்கத்தினர்களாயினர்.

o o

31-3-46ல் சிவகங்கை திராவிட கழக கட்டிடத்தில் தோழர் க. இராசசேகரன் தலைமையில் இராமநாதபுர வட்டக் கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்று தோழர் இராசசேகரன் அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது.

o o

30-3-46ல் சிவகங்கையில், தோழர் இராம. சுப்பையா தலைமையில் நடைபெற்ற திருப்பத்தூர் தாலுக்கா திராவிடர் கழக அமைப்புக்கூட்டத்தில் தோழர் சின்னதுரை அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு ஏற்படுத்தப்பட்டது,

o o

10-3-46ல் சாத்தூரில் தோழர் எஸ். எஸ். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற சாத்தூர் தாலுக்கா திராவிடர் கழக அமைப்புக்கூட்டத்தில் தோழர் பி. நாராயணன் அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக்கமிட்டி நிறுவப்பட்டது.

o o

10-3-46ல் சாத்தூர் தாலுக்காவில் நல்லான்செட்டி பட்டியில் தோழர் D. செல்லையா அவர்கள் தலைவராகவும், சுந்தரகுடும்பன்பட்டியில் தோழர் தனிக்கோடி அவர்கள் தலைவராகவும், இருக்கன்குடியில் தோழர் சுப்பையா அவர்கள் தலைவராகவும், வீரபாண்டியபுரத்தில் தோழர் ஆளவந்தார் இராமானுசம் அவர்கள் தலைவராகவும், திருத்தங்கலில் தோழர் சே. முத்தையா அவர்கள் தலைவராகவும் கொண்ட திராவிடர் கழகங்களமைக்கப்பட்டன.

o o

17-3-46ல் இடைப்பாடிக் கடுத்த குன்னம்பட்டியில் ப. காசிலிங்கம் அவர்களைத் தலைவராகக்கொண்ட சுயமரியாதைச் சங்கம் தோழர் இராமலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

22-3-46ல் செம்பாக்கம் திராவிடர் கழகத்திற்கு செ. பா வடிவேல் அவர்களைத் தலைவராகக்கொண்ட நிர்வாகக் குழு நிறுவப்பட்டது.

o

24-3-46ல் புதுவையில் கவிஞர் கனக சுப்புரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழக அமைப்புக் கூட்டத்தில் கவிஞர் கனக சுப்புரத்தினம் அவர்களைத் தலைவராகக்கொண்ட திராவிடர் கழக நிர்வாகக்குழு நிறுவப்பட்டது.

o o

தண்டராம்பட்டு திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் பா. சீதாபதி அவர்களைத் தலைவராகக் கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது.

29-3-46ல் சேலம் ஜோடர்பாளையத்தில் தோழர் என். செங்கோடன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் தோழர் ஜி. வெங்கடராமன் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஓர் செயற்குழு அமைக்கப்பட்டது.

31-3-46 ஞாயிறு மாலை 6மணிக்கு அருப்புக்கோட்டை திராவிடர் கழக அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் தோழர் ச. வீ. க. முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்று நகர திராவிடர் கழகத்திற்கு தோழர் சிவ சண்முகசுந்தரம் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழுவும், தாலுக்கா திராவிடர் கழகத்திற்கு தோழர் சின்னமல்லையா அவர்களைத் தலைவராகக் கொண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டு தோழர் கு. கணபதி கறுப்புச் சட்டைப்படை தளபதியாகவும், தோழர்கள் எஸ். எஸ். பழனிச்சாமி, எஸ். எஸ். கருப்பையா, சிவ. சண்முகசுந்தரம், க. ம. கா. சின்னமல்லையா, எம். எஸ். ராமசாமி ஆகியோர் ஜில்லா கமிட்டி உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

24-3-46ல் மன்னார்குடியில் தோழர் வி. பி. என். பாப்பையா அவர்கள் தலைமையில் திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெற்று நிர்வாகக்குழு நிறுவப்பட்டது.

## புதுப்பேட்டை திராவிடர் கழக ஆண்டுவிழா

1-4-46 திங்களன்று பண்ணுருட்டி புதுப்பேட்டை திராவிடர்கழக ஆண்டு விழா மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 8மணிக்கு கறுப்புச் சட்டைத் தொண்டர்களும், பொதுமக்களும் பெருந்திரளாகக்கூடி தலைவர்களை ஊர்வலமாக அழைத்துச்சென்றனர். காலை நிகழ்ச்சி மைதானத்தில் ஆரம்பமாயிற்று. திராவிடத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமை வகித்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் திராவிடர் கழகத் திட்டத்தை விளக்கிப்பேசினார்கள். கழகச்செயலாளர் தோழர் கே. வி. வைத்தியலிங்கம் ஆண்டு அறிக்கையைப் படித்தார்கள். கழகம் ஓராண்டில் செய்துள்ள அரும் பணியைப்பாராட்டி பெரியார் பேசியதும் இடைவேளை உணவிற்குக் கலைந்து மீண்டும் 3-30 மணிக்கு பள்ளிக்கூட மண்டபத்தில் பிற்பகல் நிகழ்ச்சி பெரியார் தலைமையில் ஆரம்பமாகியது. தோழர்கள் வில்லாளன், ஆ. திராவிடமணி, காஞ்சி கலியாணசுந்தரம், இராசவேல் ஆகியோர் பல பொருள்கள்பற்றி அரிய சொற்பொழிவாற்றினர். பின்னர் கறுப்புச்சட்டைப்படையின் உருவப் படம் எடுக்கப்பட்டது.

மாலை 6-30மணிக்கு கழக நிலையத்திற்கு எதிரேயுள்ள திடலில் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் தோழர் விழுப்புரம் அப்துல் வஹாப் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாகியது. பெரியார் அவர்கள் 2½மணி நேரத்திற்குமேல் தற்கால அரசியல் நிலைமையைவிளக்கி விரிவுரையாற்றினார்கள். தோழர் காஞ்சி கலியாணம் அவர்கள் பிரிட்டிஷ் தூது கோஷ்டிபற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர் ஆ. திராவிடமணி நன்றி கூறினார்.

---

19-2-46ல் சாத்தூர் திராவிடர் கழகத்தின் சார்பில் நல்லான்செட்டி பட்டியிலும், 20-2-46ல் பொத்தையம்பட்டியில் தோழர் முத்து தலைமையிலும், 22-2-46ல் வாளவந்தா புரத்தில் தோழர் சா. இராமசாமி தலைமையிலும் நடைபெற்ற கூட்டங்களில் தோழர்கள் பி. இராசமணி, இளசை முத்துகருப்பன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தேவை! தேவை!! தேவை!!!

எமது அச்சகத்தில் வேலைசெய்ய அநுபவம் வாய்ந்த கம்பாஸிட்டர்கள், மிஷின் போடுபவர்கள், பைண்டர்கள் தேவை. தகுதி பார்த்து சம்பளம் தரப்படும். பழைய அனுபவத்துடன் எழுதவும்.

ஸ்ரீ இலக்ஷ்மி பிரஸ், திருவத்திபுரம் (N. A.)

ஆய்ச்சி நூலக அறக்கட்டளை

## நடக்க இருப்பவை

● 7-4-46 ஞாயிறு மாலை 6மணிக்கு திருச்சி டவுன் ஆலில், திருச்சி பெரியார் இளைஞர் கழக ஆண்டுவிழாவும், பட்டுக்கோட்டை தோழர் கே. சாமிநாதனுக்கு வரவேற்பும், தோழர் முத்துசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். திறப்பாளர் டி. பி. வேதாசலம் அவர்கள். தோழர்கள் டி. கே. சீனுவாசன், க. அன்பழகன், சம்பத், நடராசன் மற்றும் பலர் கலந்துகொள்வார்கள்.

● 10-4-46 புதன் மாலை 6மணிக்கு சென்னை பார்க்டவுன் பொம்முசெட்டித்தெரு 11ம் எண் வீட்டில் சென்னை 2வது சர்க்கிள் திராவிட மாநாட்டு வரவு செலவு கணக்கு பரிசீலனை (பல இடங்களில் இயக்கக்கூட்டங்கள் நடைபெற்றதால் குறிப்பிட்டபடி 26-3-46ல் நடைபெறவில்லை) கூட்டம் நடைபெறும். 2வது சர்க்கிள் நிர்வாக அங்கத்தினர்கள் தவறாது வருமாறு மாநாட்டு செயலாளர் கே. கோவிந்தசாமி வணக்கமாகக் கேட்டுக்கொள்கிறார்.

● 19-4-46 வெள்ளியன்று நாமக்கல்லில் சேலம் மாவட்ட திராவிட மாணவர் இரண்டாவது மாநாடு நடைபெறும். அவ்வமயம் பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் சி. என். அண்ணாதுரை எம். ஏ., இளைய பட்டக்காரர் என். அர்ச்சுனன், க. அன்பழகன், டி. பி. வேதாசலம், எ. சித்தையன், ஆ. திராவிடமணி முதலியோர் கலந்துகொள்வார்கள்.

● 11-4-46 வியாழன் மாலை 5மணிக்கு பாளையங்கோட்டை மணமகன் இல்லத்தில் தோழர் எ. வி. முத்தையா அவர்கள் தலைமையில் தோழர் சு. ஆறுமுகம்—முத்தம்மாள் வாழ்க்கையொப்பந்தம் நடைபெறும். தோழர்கள் க. மு. பிரமநாயகம், அருணாசலம், அருச்சுனன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

---

## பிறப்பு

24-3-46ல் குடந்தை தோழர் நடராசன் அவர்களின் ஆண் மகவுக்கு தோழர் மா. பிச்சையன் அவர்களால் "நெடுஞ்செழியன்" எனப் பெயரிடப்பெற்று குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

o o

22-2-46ல் புனலூர் தோழர் ஜி. கே. வர்க்கி அவர்களின் வாழ்க்கைத்துணைவியாருக்குப் பெண் குழந்தை பிறந்து "ரஷியா" எனப் பெயரிடப்பெற்றது. குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

## ஆங்காங்கே!

### திருச்சி மாவட்ட தோழர்களுக்கு

இதுவரை திராவிடர் கழக அங்கத்தினர் சேர்க்கும் இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள கழகங்களும் தோழர்களும் 10-4-46க்குள் பூர்த்திசெய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்வதோடு மேற்கொண்டு தேவைப்படும் புத்தகங்களை தோழர் சுலைமானிடம் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எம். நடராசன்,

திருச்சிமாவட்ட தி. க. செயலாளர்.

### நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு

ஒவ்வொரு மாவட்டமும் அங்கத்தினர் சேர்ப்பதில் போட்டிபோட்டு முன்னேறிச்செல்லுகையில் நம் மாவட்டம் மட்டில் 6வது இடத்தில் இருந்துகொண்டு வாளா இருப்பது ஏன்? பெருவாரியான அங்கத்தினர்களைச் சேர்த்து உடனே முன்னணிக்கு வர வேண்டுகிறேன்.

கே. வி. கே. சாமி.

### திருத்துறைப்பூண்டி தாலூகா திராவிடத் தோழர்களுக்கு

தாலுக்கா மாநாடு நடைபெற விருப்பதால் உடனே ஆங்காங்குள்ள திராவிடர் கழகங்களையும், உறுப்பினர் சேர்க்கும் விவரத்தையும், கறுப்புச்சட்டைப்படை தோழர்களின் பெயரையும் அவசரமாகக் கருதி கீழ்கண்ட முகவரிக்கு தெரிவிக்க வேண்டுகிறேன்.

எம். கே. ஹாஜாமீர்,
தாலுக்கா திராவிடர் கழகம்,
திருத்துறைப்பூண்டி.

### தஞ்சை மாவட்டத் திராவிடர் கழகங்கட்கு!

அன்புடையீர்! இவ்வாண்டு மாணவர் சுற்றுப்பிரச்சாரத்திற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றுவிட்டன. ஆங்காங்குள்ள தோழர்கள் உடனே 15-4-46க்குள் கூட்டம் நடத்தும் இடங்களையும் குறிப்பாக கிராமங்களையும் எழுதி அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

வி. எஸ். பி. யாகூப்,
மாவட்ட சுற்றுப்பிரச்சார செயலாளர்,
விசயபுரம் போஸ்டு, திருவாரூர்.

### தென்னாற்காடு மாவட்டத் தோழர்களுக்கு

இயக்கக்கூட்டங்கள், மாநாடுகள் நடத்துவதில் நமது மாவட்டத்தில் அதிக ஆர்வமும், மகிழ்ச்சியும் காட்டப்படுகிறது. ஆனால் அந்த அளவிற்கு இயக்க வேலையில் குறிப்பாக அங்கத்தினர் சேர்ப்பதில் ஊக்கம் காட்டாதது மிக வருந்தத்தக்கது. இரசீது புத்தகங்கள் பெற்றுள்ள கழகங்களும் தோழர்களும் உடனே கூடுமானவரை உறுப்பினர்களைச் சேர்த்துதவவேண்டுகிறேன்.

சி. முனுசாமி, விருத்தாசலம்.

## திருவல்லிக்கேணி வட்டத் திராவிடர் மாநாடு

7-4-46 ஞாயிறு காலை 8மணிமுதல் பகல் 2மணி வரை திருவல்லிக்கேணி ஐஸ் அவுஸ்ரோட் போலீஸ் ஸ்டேஷன் எதிரில் ஆனைகுளம் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் சி. நடேசன் பந்தலில் நடைபெறும்

தலைவர் எ. பி. ஜனார்த்தனம் எம்.ஏ. திறப்பாளர்:-சத்யவாணிமுத்து. கொடியேற்றுபவர்:- ஈரோடு சண்முகவேலாயுதம்.

ஊர்வலம்: மாலை 4மணிக்கு மாநாட்டுப்பந்தலிலிருந்து தலைவர் பெரியார் அவர்களுடன் புறப்பட்டுத் திருவல்லிக்கேணி கடற்கரையில் முடிவுறும்.

பொதுக்கூட்டம்: மாலை 6மணிக்கு, திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெறும். மாநாட்டிலும் பொதுக்கூட்டத்திலும் தலைவர் பெரியார், தளபதி அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், ஈ. வி. கே. சம்பத் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

மாநாட்டுக்கட்டணம் அணா 8, 4
ஒலிபெருக்கி உண்டு

மாநாட்டுப் பந்தலில் மட்டுமே காலை 7மணி முதல் டிக்கட் விற்கப்படும்.

தாய்மார்களே, மாணவர்களே, தொழிலாளர்களே, தோழர்களே பெருந்திரளாக கறுப்புச்சட்டையுடன் வாருங்கள்.

வரவேற்புக் கமிட்டியார்.

---

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

20-3-46ல் வாணியம்பாடி புதூரில் தோழர் ஈஸ்வரன்—சிவகாந்தி வாழ்க்கையொப்பந்தம் தோழர் சி. கோவிந்தராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்று தோழர்கள் சி. என். அண்ணாதுரை, டி. பி. எஸ். பொன்னப்பன், எகாம்பரம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடை அளிக்கப்பட்டது.

o o

30-3-46ல் குடந்தையில் தோழர் வி. சின்னத்தம்பி அவர்கள் தலைமையில் தோழர் எ. இராமையா-ரத்னம் வாழ்க்கையொப்பந்தம் நடைபெற்று பெரியார் ஈ. வெ. ரா. தோழர்கள் கே. கே. நீலமேகம், எஸ். கே. சாமி, எஸ். ஆர். சாமி, பி. ஆர். பொன்னுசாமி, பாவலர் பாலசுந்தரம், சொக்கப்பா, தவமணிராசன், மணி அம்மையார் ஆகியோர் "சீர்திருத்த திருமணம்" பற்றிச் சொற்பொழிவாற்றினர். தோழர் குருசாமி நன்றி கூறினார். குடி அரசுக்கு ரூபா ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

---

குடி அரசு

1946-ஆண்டு ஏப்ரல்மீ 6-உ

# நாம் செய்யப்போவது?

காங்கரஸ் பதவிக்கு வந்துவிட்டது. காங்கரஸ் தன்னை இந்த நாட்டு மக்கள் யாவருக்கும் பிரதிநிதி என்று சொல்லி உரிமை பாராட்டுகிறது.

நாம் அதை வன்மையாக மறுக்கிறோம். அதுமாத்திரமல்ல, மறுத்து காங்கரசுக்கு மாறாக பதிவு செய்யப்பட்ட 50000 அங்கத்தினர்களுடன் வேறுஒரு ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறோம். இது (ஜஸ்டிஸ் கட்சி) ஏற்பட்டு இன்றைக்கு 30 வருட காலம் ஆகிறது.

இந்தப்படியாக காங்கரசை தங்களது பிரதிநிதி என்று ஒப்புக்கொள்ளாத மக்கள் ஸ்தாபனம் ஜஸ்டிஸ் கட்சி மாத்திரமல்ல. பொதுவாக அரசியல் ஞானத்தோடு நாணயமாகப்பேசவேண்டுமானால்,

1. மொத்த இந்தியாவின் மூன்றில் ஒருபாகம் விஸ்தீரணத்திற்கும் மக்கள் எண்ணிக்கைக்கும் ஆளான சுதேச சமஸ்தானங்களும் பிரஜைகளும் பிரதேசமும் காங்கரசைத் தங்கள் பிரதிநிதிஸ்தாபனம் என்று ஒப்புக்கொள்ளுவதில்லை, அங்கு செல்லவும் செல்லாது.

2. மீதிஉள்ள ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்கு எண்ணிக்கை உள்ள மக்களான முஸ்லிம் சமுதாயத்திற்கு காங்கரஸ் பிரதிநிதி அல்ல. முஸ்லிம்களுக்கு தனிஸ்தாபனம் 1904ல் அதாவது இன்றைக்கு 40 வருடங்களுக்கு முன்னாலேயே ஏற்பட்டு வளர்ந்து வந்து 100க்கு 99க்கு மேற்பட்ட முஸ்லிம்களான 9கோடி மக்கள் ஆதரவுபெற்று வெளிப்படையாய் என்றென்றைக்கும் ஒட்டாத தன்மையில் பிரிந்து காங்கரசை எதிர்த்து நிற்கிறது.

3. மீதிஉள்ள மக்களில் சுமார் 4ல் ஒரு பங்கு மக்களான பஞ்சமர்கள், தீண்டப்படாதவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஷெடியூல் வகுப்பார்கள், என்றெல்லாம் சொல்லப்படுபவர்களான ஐந்து கோடி ஆதிதிராவிடர்கள் என்பவர்களில் பெரும்பான்மையோர் சுமார் 25-வருடங்களுக்கு முன்பாகவே காங்கரசிலிருந்து விலகி தனி ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

4. மீதிஉள்ள மக்களில் சுமார் 3ல் ஒருபங்கு மக்களான திராவிடர்கள் அதாவது முதலாவதாக குறிக்கப்பட்ட ஜஸ்டிஸ்கட்சிக்காரர்கள் என்றும், பார்ப்பனரல்லாதார் என்றும், தென்இந்தியர் என்றும் சொல்லப்பட்ட மூன்று கோடிக்கு மேற்பட்ட திராவிடர்கள் 30வருடங்களுக்குமுன்பே காங்கரசைவிட்டு விலகி தனி ஸ்தாபனம் ஏற்படுத்திக்கொண்டு இருந்து வருகிறார்கள்.

5. இவர்கள் அன்றி ஒரு கோடிப் பேர்களான கிறிஸ்துவர்களும் பிரிந்து தனி ஸ்தாபனம் கொண்டிருக்கிறார்கள்.

6. இவைதவிர சீக்கியர்கள் அரைக்கோடிபேர்கள் காங்கரசைவிட்டு விலகி தங்களை இந்துக்கள் அல்ல என்று சொல்லிக்கொண்டு தனி அரசியல் ஸ்தாபனம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

7. மிக்க செல்வவந்தர்கள், ஆலை சொந்தக்காரர்கள் ஆன பார்சிகர்கள் காங்கரசில் இல்லாமல் தனி ஸ்தாபனம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

8. மிக்க அறிவாளிகள் அரசியல் ஸ்டேட்ஸ்மென்கள் என்பவர்களான படித்த, செல்வாக்குள்ள பிரபலஸ்தர்கள் என்பவர்கள் சர்க்காருக்கு அவ்வப்போது இந்திய அரசியலைப் பற்றி யோசனை சொல்பவர்கள், சர்க்காரால் யோசனை கேட்கப்படுகிறவர்கள் என்பவர்களான மிதவாதிகள், லிபரல்கள், சாப்ரு, ஜயக்கர், சாஸ்திரி, சிவசாமி, அல்லாடி கோஷ்டிகள் காங்கரசின் பிரதிநிதித்துவத்தை ஏற்றுக்கொள்ளாமல் செல்வாக்குப்பெற்ற தனி ஸ்தாபனம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

9. ஏராளமான வர்ணாச்சிரமிகள் காங்கரசை ஏற்றுக்கொள்ளாமல் மாறுபட்டு வர்ணாச்சிரம சுயராஜ்ஜிய சங்கம் இந்தியா முழுமைக்குமே ஏற்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

10. இவ்வளவும் அல்லாமல் இந்தியாவில் உள்ள இந்துக்களுக்கு ஆதரவான பல தீவிர தேசியவாதிகள், தேசபக்தர்கள், தேசத்திற்கு ஆக பல முறை சிறைசென்றவர்கள் என்பவர்கள் ஆன சவர்க்கார், வரதராஜுலு நாயுடுகளும், ராமசாமிசாஸ்திரி, மூஞ்சே முதலிய பிரபல பெரியார்களும் தலைவர்களாயிருந்துகொண்டு மற்றும் பல பிரபல மக்கள் ஆகியும், G. D. நாயுடு போன்ற கோடீஸ்வரர்கள் சென்று மாநாட்டைத் திறக்கும்படியான ஆதரவும் பெற்று இந்து மகா சங்கம் என்பதாக ஒரு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி, இந்தியா முழுமையிலும் பல ஸ்தாபனங்கள் வைத்து ஒரு மாபெரும் அரசியல் ஸ்தாபனம் என்று கூறப்படும் காங்கரசை எதிர்த்து வருகிறார்கள்.

11. போதாக்குறைக்கு அரசியல், சமுதாய இயல், கல்வி இயல், மத இயல் ஆகியவைகளுக்குஆக என்றே பிரபல பார்ப்பனர்கள் காங்கரஸ் அல்லாதவர்களாய் ஒன்றுகூடி பிராம்மண பாதுகாப்பு சபை என்பதாக ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு ஆங்காங்கு தனி ஸ்தாபனம் ஏற்படுத்தி, தனி அரசியல் கட்சிக்காரர்களாய் இருந்து வருகிறார்கள்.

இவைகள் யாவும் வெளிப்படையாய் ஆதாரங்கள் மூலமும் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களாகவும் இருந்து வருகின்றன.

மற்றும் சொல்லவேண்டுமானால் இந்த இவ்வளவு ஸ்தாபனங்களுக்கும் தனித்தொகுதிகள் ஏற்படுத்தி காங்கரசோடு போட்டி போட தேர்தல்களுக்கு விட்டால் காங்கரஸ் எப்படி முஸ்லிம் தொகுதியிலும், ஆங்கிலோ இந்தியர் தொகுதியிலும் ஆதிதிராவிட தொகுதியிலும் ஒரு ஸ்தாபனம்கூட வெற்றிபெற முடியாமல் போயிற்றோ அதுபோல் காங்கரஸ் யாருக்கும் பிரதிநிதித்துவம் அற்றதாகிவிடும்.

இப்படிப்பட்ட காங்கரஸ் இன்று இந்திய மக்கள் பிரதிநிதி ஸ்தாபனம் என்பது எப்படி இருக்கிறது என்றால், யாரோ ஒரு பார்ப்பனரை அதுவும்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

தன்னைப் பொறுத்தவரை கொள்கைவேறு, நடத்தைவேறு, உபதேசம் வேறு, உள் எண்ணம் வேறு என்பதாக இருந்து கொண்டு மற்ற பெரும்பான்மையான மக்களுக்கு எவ்வித சம்பந்த மற்றவராகவும் இருந்துகொண்டு இருக்கிற, ஒரு பார்ப்பனரை லோக குரு என்றும், ஜகத்குரு சன்னிதானம் என்றும், ஆச்சாரிய சாமிகள் என்றும் சொல்லப்படுவதும் மற்ற மக்களையும் அந்தப்படி அழைக்கும்படியும் விளங்கும்படியும் செய்யப்படுவதும் எப்படியோ அதுபோல்தான் காங்கரஸ் எல்லா இந்திய பொதுமக்கள் தேசிய சபை என்பதாகும்.

இப்படிப்பட்டகாங்கரஸ் இன்று வெற்றிபெற்று தன்னை இந்திய 45 கோடி மக்களின் ஏகப்பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்றால் அதைப்பற்றி பார்ப்பனப்பத்திரிகைகள்செய்தபிரசாரச்சூழ்ச்சியை அறியாத மக்களும், அல்லது காங்கரசைப்போலவே மக்களை ஏமாற்றிச் சுரண்டிவாழும் அது போன்ற ஸ்தாபனங்களும், இவர்கள் காட்டிக்கொடுப்பதால் வாழும் பொருப்பற்ற அரசாங்கமும் தான் ஒப்புக்கொள்ள முடியுமே தவிர, அவர்களால்தான் இதற்குப் பிரதிநிதித்துவ உரிமை கிடைக்கச் செய்ததே தவிர உண்மையும் நாணயமும, நீதியும், நேர்மையும், ஒருநாளும் காங்கரசை ஒப்புக் கொள்ளச்செய்ய முடியாது.

காங்கரசின் தன்மை எப்படி இருந்தாலும் அதனுடைய பிரதிநிதித்துவதன்மையோ, நாணயமோ எப்படி இருந்தாலும் அதை நாம் இந்தக்காரியத்திற்கு ஆகவே எதிர்க்கப்போவதில்லை. அது செய்யும் காரியத்தைப் பொருத்தே அதனிடம் நமது செயல் இருக்கப்போகிறது. அது ஏகபோகமாய் எதிர்ப்பே இல்லாமல், சர்வாதிகாரத் தன்மையோடு செய்யப்போகும் காரியம் என்ன என்பதைப் பார்த்தே அதைப்பற்றி நாம் செய்யப்போவது என்ன என்பதைத் தீர்மானிக்கப் போகிறோம்.

இன்று ஸ்தல சுயாட்சி ஸ்தாபனங்களின் நடத்தைக்கு எப்படி பெரிதும் பிரிட்டிஷ் ஆட்சியையே பொருப்பாக்கிப்பேசாமல் அந்தப் பொருப்பை ஸ்தாபன நிருவாகிகளைப் பொருப்பாக்கிப் பேசுகிறோமோ அதுபோல் நம்மாகாண ஆட்சி நிலையும் இன்று வந்திருக்கிறது ஆதலால் இனி பெரிதும் பிரிட்டிஷாரை குறைகூறவேண்டிய கட்டாயம் ஏற்படாதென்றே நினைக்கிறோம். அதற்கு ஆகவே பிரிட்டிஷ் மந்திரிகள் நம் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். நாணயமாகவோ, சூழ்ச்சியாகவோ பிரிட்டிஷார் இந்தத் தடவையில் தங்கள் பொருப்பை மிகமிகக் கழித்துக் கொள்ளுவார்கள்போல் தெரிகிறது. இந்த நிலையில் நமக்கு பிரதிநிதித்துவம் இல்லை, நம்மை ஒரு கட்சியாக, ஒரு ஸ்தாபனமாக, யாருக்காவது, எந்தக்கொள்கைக்காவது பிரதிநிதியாக காங்கரசும், சர்க்காரும் ஏற்றுக்கொள்ளவில்லை, கருதவும் இல்லை.

ஆகவே நாம் செய்யப்போவது என்ன என்பது மிகவும் பொருப்போடு பொறுமையோடு யோசித்துச் செய்யவேண்டி இருக்கிறது. இன்று நம் நாட்டில்,

1. மேல்ஜாதி, கீழ்ஜாதி என்ற பேதமும்,
2. படித்தவன் படிக்காதவன் என்ற தன்மையும்,
3. பணக்காரன் ஏழை என்ற நிலைமையும்,
4. முதலாளி அல்லது எஜமான் தொழிலாளி அல்லது கூலி என்கின்ற முறைமையும் இருந்து வருகிறது.

இதனால் ஏற்படும் குறைபாடு கொடுமை என்பவைகளைத் தவிர உலகில் மக்களுக்கு வேறு தொல்லை இல்லை என்றும், தொல்லைக்கு அடிப்படை இல்லை என்றும் சொல்லலாம். இவற்றுள் முற்கூறிய பெரியஜாதி, சின்ன ஜாதி, படித்தவன், தற்குறி (படிக்காதவன்) என்கின்ற கொடுமை அதாவது சகல குறைபாடுகளுக்கும் ஆஸ்திவாரமாக இருக்கும் கேடுகள் நம் நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இல்லை என்று சொல்லலாம். ஆதலால் 'இந்த நாட்டில் இப்போது உடனடியாக ஒரு யோக்கியன், ஒரு வீரன், ஒரு தெய்வீக் சக்தி கொண்ட மகான் என்பவன் செய்யவேண்டிய வேலை இந்த இரண்டுமேயாகும். இந்த இரண்டிலும் முதன்மையானதாகச் செய்யவேண்டியது முதலாவதான மேல்ஜாதி, கீழ்ஜாதி என்பதை ஒழிப்பதேயாகும். ஆகவேதான், அந்தக் கருத்தின்மீதே நம் திராவிட கழகம் முதலாவதாக இதனைய கருதி இதை முதல் வேலைத் திட்டமாகவும் கைக்கொண்டு இருக்கிறது. எனவே இது விஷயத்தில் காங்கரஸ் செய்யப்போவதைப் பொருத்தே அதோடு நாம் வைத்துக்கொள்ளும் சம்பந்தம் இருந்துவரும் என்று மேலே சொன்னோம்.

78வயது ஆனபின்பு இப்போது தான் காந்தியார் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன

# திராவிடர் கழகத்திற்கு
## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 6-4-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 39,838

இம்மாதம் 6உ வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப்பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. தஞ்சை | 6584 | 8. சென்னை இவ்வாண்டில் 525 | 2395 |
| 2. சேலம் | 6563 | 9. தென் ஆற்காடு | 2206 |
| 3. கோவை | 6096 | 10. மதுரை | 1556 |
| 4. திருச்சி | 4518 | 11. செங்கல்பட்டு | 950 |
| 5. இராமநாதபுரம் | 25[illegible]0 | 12. பெங்களூர் | 242 |
| 6. வடஆற்காடு | 2472 | 13. திருவிதாங்கூர் | 218 |
| 7. திருநெல்வேலி | 2423 | 14. புதுக்கோட்டை | 95 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

ரோஜா முத்தையா

தன்மையில் பறச்சேரியில் போய் குடி இருக்கப் போகிறேன் என்று சொல்லி அங்கு குபேரர்களை விட்டு "குடிசை" கட்டச் சொல்லி இருக்கிறார். இந்த சூட்சியை அறிந்து சேரிக்காரர்கள் காந்தியார் "குடிசை" மீது கற்கள் போட்டு, காந்திக்கும் கொடும்பாவி கட்டி இழுத்து இருக்கிறார்கள். அங்கு காந்தியாருக்கே இந்த கதியானால் இங்கு இந்த சாதாரண காந்தி பூசாரிகளுக்கு நடக்கக்கூடிய காரியம் நடக்கவேண்டிய காரியம் என்ன என்பது யாவரும் அறிந்திருப்பார்கள்.

ஆதலால் காங்கரஸ் பாவி எற்றதும் மேல்ஜாதி கீழ்ஜாதி என்கின்ற ஜாதி ஆணவம் கொடுமை ஒழிக்கப்படவேண்டும். பிராமணாள் ஓட்டல், பிராமணாள் சாப்பிடும், பிரவேசிக்கும் இடம், அன்பவைகள் ஒழிக்கப்படவேண்டும், பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன், ஜாதி இந்து, ஜாதி குறைவான இந்து என்பனவாதியவைகள் அரசாங்க ஆதாரங்களில் நடைமுறைகளில் இருக்க இடம் வைக்கக்கூடாது.

இந்து லாவிலும் உள்ள இக்கொடுமைகள் உடனே மாகாண கவர்னர்களுக்கும், மாகாண சர்க்கார்களுக்கும் உள்ள அதிகாரங்களைப் பொருத்தவரை திருத்தப்படவேண்டும், இவைகளைச் செய்தால் திராவிடர் கழகத்தார் காங்கரசின் நண்பர்களேயாவார்கள். இந்த காரியம் செய்தால் உத்தியோகங்களைப்பற்றிக் கூட கவலை இல்லை. பார்ப்பனர்களே எல்லா உத்தியோகமும் பார்த்தாலும் சம்மதிப்பார்கள். திராவிடர்கள் தங்கள் பெரும் உத்தியோகத்தின்மூலம் இனஉணர்வோடு திராவிடர்களைக் காப்பாற்றும், திராவிடர்களுக்கு உழைக்கும் தகுதி பெற்றபிறகு பார்த்துக்கொள்ளலாம். இந்தி படிப்பித்தலும்கூட இன்று குற்றமில்லை என்போம். தமிழர்களுக்கு மானம் வந்தபிறகு ஒழிக்கப் பார்த்துக்கொள்ளலாம். இனி சர் ராமசாமிக்குமேல் சர் ஷண்முகத்திற்குமேல் யார்தான் எந்த உத்தியோகம்தான் பார்க்க முடியும். இவர்களால் திராவிடர்கள் வாழ்ந்ததென்ன? திராவிடர்கள் வாழ்வு உயர்ந்ததென்ன? ஒரு சர் சி.பி. ஒரு கனம் சாஸ்திரி, என் ஒரு ஆர். வி. கிருஷ்ணய்யர் இவர்களால் பார்ப்பனர் அடைந்ததெவ்வளவு? தமிழ்தானாகட்டும் ஒரு சாமி வேதாசலம், ஒரு மீனாட்சிசுந்தரம், ஒரு மகா மகோ கதிரேசன் இவர்கள் தமிழ்படித்ததெவ்வளவு? இவர்களால் திராவிடர் வாழ்ந்ததென்ன? ஆனால் ஒரு மு. ராகவய்யங்கார், ஒரு ரா. ராகவய்யங்கார்; ஒரு மகா சாமிநாதய்யர் இவர்களால் பார்ப்பனர் தமிழ் படித்ததின்மூலம் வாழ்ந்ததெவ்வளவு? ஆகவே இன்றைய தன்மையில் உத்தியோகமும் தமிழும் தனிப்பட்ட குடும்பத்துக்கு கம்பெனிக்கு லாபமே தவிர திராவிடத்திற்கு திராவிடருக்கு பயனற்றதாகவே இருக்கிறது. எனவே திராவிடன் மந்திரி ஆகவேண்டுமென்ற கவலையும் இன்று நமக்கு இல்லை. ஜாதிக்கொடுமை, தீண்டாமை, பார்க்காமைக்கொடுமை முதலில் ஒழியட்டும். இதை காங்கரஸ் செய்தால் நாம் காங்கரஸ் தொண்டர்கள் என்று சொல்லிப் பெருமை அடைவோம் இல்லாவிட்டால் ஒரு மூச்சு அதுவும் சற்றேறக்குறைய கடைசி மூச்சாகவே பார்த்துவிடப்போகிறோம். இதுதான் நாம் செய்யப்போவது.

நமது திராவிடமாணவ, இளைஞதோழர்களுக்குச் சொல்லுகிறோம். இதே இறுதிப் போராட்டமாகக் கருதுங்கள். இதில் இரண்டில் ஒன்று பார்த்துவிடவேண்டும்.

கம்யூனிஸ்டுகளுடனும் நமக்குத் தகராறு இல்லை. அவர்கள் பார்ப்பனர்களைத் தலைவர்களாகக் கொண்டு இருக்கிறார்கள், கதர் போடுகிறார்கள், காந்திக்கு ஜே சொல்லுகிறார்கள். மூவர்ணக் கொடியின் நிழலின்கீழ் நிற்கிறார்கள். தொலைந்து போகட்டும். அவர்கள் மானத்தின் வலிமை அவ்வளவு என்று கொள்ளுவோம். ஆனால் கம்யூனிஸ்ட் என்பவர் கடவுளை, மதத்தை, பார்ப்பானை சாஸ்திரத்தை, கோயிலை, கோயில் செலவை, பார்ப்பனச் சடங்கை, கோவில், மடப் பொருளை, மடாதிபதிகளைப்பற்றி மறந்தும் பேசமாட்டோம் என்கிறார்கள். இவர்களைத்தான் நாம் "நீங்கள் எப்படி நாணயமான கம்யூனிஸ்ட்களாவீர்கள்" என்கிறோம். ஆகையால் இவர்கள் ஜஸ்டிஸ் கட்சியார் திராவிடர்கள் ஆகியவர்களை வையாமல் இதன்மூலம் பார்ப்பனர்களுக்கு காங்கரசாருக்கு நல்ல பிள்ளைகளாகப் பார்க்கும் கீழ்மையை உதறித்தள்ளிவிட்டு உண்மை கம்யூனிஸ்டுகளாகட்டும். நாமும் கொடிதூக்கி அவர்கள் பின்தொடரத் தயாராய் இருக்கிறோம். இல்லாவிட்டால் அதோடும் போராட முடிவு செய்துள்ளோம்.

இதுதான் இன்று திராவிடர் கழகம் கைக்கொள்ளவேண்டிய கடமை என கருதுகிறோம்.

ஆகவே நம் போராட்டத்தின் போது காங்கரசிலும் கம்யூனிசத்திலும் இருக்கும் திராவிட தோழர்களை ஏமார்ந்துபோய் நாம் ஒருவருக்கொருவர் முட்டிக்கொள்ளும் மூடத்தனத்தில் இறங்கி தற்கொலை செய்துகொள்ள வேண்டாம் என்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

---

## பெண்ணுரிமை

ஏதோ சிலசந்தர்ப்பங்களில் மணமான இந்துப் பெண்கள் கணவனிடமிருந்து வாழ தனி இடமும், ஜீவனாம்சமும் பெற உரிமைதரும் சட்டம் ஒன்று 2-4-46ல் மத்திய சட்டசபையில் நிறைவேறியுள்ளது. இது உதவாக்கரை சட்டம் என்பதை கீழே விளக்கியுள்ளோம். இந்த உரிமைகூட பெண்களுக்கு தரக்கூடாதென இந்துமகாசபைக்காரரும், சனாதனிகளும் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார்களாம். இச்சட்டத்தை சட்டசபை நிராகரித்துவிடவேண்டுமென "தேசபக்த" மாளவியாவும் கேட்டுக்கொண்டாராம்.

பெண்களுக்கு கலியாண விடுதலைக்கு அனுமதியில்லாமலும், ஒரு கணவன் இருக்கும்போது மற்றொரு கணவனை மணந்துகொண்டுவாழ உரிமையில்லாத பொழுது, கணவனுக்கு மாத்திரம் மற்றொரு மனைவி கட்டிக்கொள்ள அனுமதியிருப்பதுமான சட்டம் எவ்வளவு புரட்சிகரமான மாறுதலானது என்று பேசப்பட்டாலும், அது உண்மையில் பலனற்றது என்பதே நமது கருத்து.

இந்த சட்டமானது இதுவரையிலும் காந்தியாரும், காங்கரசுகாரர்களும், இந்து சீர்திருத்தக்காரரும் தீண்டாமையைப்பற்றிப் பேசிவந்த சூழ்ச்சியைப் போலும் சூழ்ச்சி இல்லாவிட்டால் அறியாமையைப் போலும், இரண்டுமல்லா

## பெரியார் ஈ. வெ. ரா.

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கும்பகோணம், மாயவரம், கூடலூர், பண்ணுருட்டி, விருத்தாசலம், பெண்ணாடம், ஆகிய இடங்களுக்குச் சென்று, திருமணம், மாநாடு, ஆண்டுவிழா, சங்கத் திறப்பு, பொதுக்கூட்டங்கள் முதலியவைகளில் கலந்து நடத்திவிட்டு 4ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். 5ந்தேதி மாலை திருச்சி புறப்படுகிறார். திருச்சி, குறிஞ்சிப்பாடி, (தென் ஆற்காடு) சென்னை, சேலம் முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு 12ந்தேதி வாக்கில் ஈரோடு வருவார்.

---

விட்டால் ஓர் வீண் வேலையைப்போலும்தான் ஆயிற்றே ஒழிய வேறொன்றுமில்லை.

நிறைவேறியிருக்கும் புதிய சட்டத்தில் பெண் தனித்திருக்கலாம் என்றிருக்கிறது. இதனால் பெண்ணுக்கு லாபமென்ன? தனியே இருந்து வேதனைப் படவேண்டியது தவிர அல்லது புருஷனால் கருதப்படும் கெட்ட காரியமென்னும் வியபிசாரமென்று சொல்லப்படும் குற்றத்திற்குப் பெண்களை ஆளாக்கக் கணவன் உள்பட மற்றவர்கள் ஆதாரங்கள் கவனிப்பதைத்தவிர வேறென்ன முடியும்?

ஜீவனாம்சம் என்று சொல்வதும் இதற்குமுன் இருந்துவருகிற ஜீவனாம்சமே தவிர புதிய ஜீவனாம்சம் ஒன்றுமில்லை.

ஜீவசுபாவங்களின் இயற்கை உணர்ச்சியாகிய இன்ப நுகர்ச்சி திருப்திக்கு வசதியில்லாத கட்டுப்பாடுகளும், நிபந்தனைகளும் வைத்துக்கொண்டு எந்தவிதமான மாறுதல் செய்தாலும் வருணாச்சிரமத்திற்குப் புதிய பாதுகாப்பும், வியாக்கியானமும் ஏற்படுவதுபோலும், புராணங்களுக்கு தத்துவார்த்தம் சொல்வது போலும்தான் முடியுமே தவிர வேறில்லை. ஆகவே பெண்கள் தங்கள் ஜீவசுபாவத்துக்காக தாங்களே முயற்சியெடுத்துக் கட்டுப்பாடுகள் என்னும் விலங்குகளை தகர்த்தெறிய முற்பட்டாலொழிய தங்களை வாசனை திரவியங்கள் போலவும், உடையணிகள் போலவும் மதித்து அனுபவித்துக்கொண்டுவரும் ஆண்களாலும் எப்படிப்பட்ட சமதர்ம ஆட்சியாலும் பொதுவுடமைக்காரருடைய புரட்சியாலும், விடுதலை ஏற்படாது என்பது நமது கருத்து.

## தூது கோஷ்டி

பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டியார் திராவிடர் கழகத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று ஆங்காங்கு திராவிடர் கழகங்களில் தீர்மானித்து தூதுகோஷ்டிக்குத் தந்தி அனுப்பியிருப்பதாகச் செய்திகள் வருகின்றன. இது அவசியம் என்று நமக்குத் தோன்றவில்லையாதலால் திராவிடர் கழகத் தோழர்கள் அவ்விதமாக தூதுகோஷ்டிக்கு வேண்டுகோள் அனுப்பவேண்டாமெனக்கேட்டுக்கொள்கிறோம்.

## குடந்தையில் இரு மாநாடுகள்

18-5-46ல் தஞ்சை மாவட்ட திராவிடர் மாநாடும்,

19-6-46ல் தஞ்சை மாவட்ட சுயமரியாதை மாநாடும் நடைபெறும்.

மாநாட்டுப் பந்தலில் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தினரால் முதல்நாளிரவு "சந்திரோதயம்" நாடகமும், இரண்டாம் நாளிரவு "சிவாஜிகண்ட இந்து ராஜ்யம்" என்ற நாடகமும் நடைபெறும்.

"சந்திரோதயம்" நாடகத்தில் குடந்தைத் தோழர்கள் வி. சின்னதம்பி, கே. கே. நீலமேகம், பி. ஆர். பொன்னுசாமி, எஸ். இராமாமிர்தத்தம்மையார், ஈ. வெ. கி. சம்பத் முதலியோரும் நடிப்பர். பிற விவரங்கள் பின்னர்.

## மாணவர் பகுதி

நாகை தேசீய உயர்நிலைப்பள்ளியில் திராவிட மாணவர்களின் அருமுயற்சியால் 4-2-46 முதல் சமஸ்கிருதப் பாடல்களுக்குப்பதில் தமிழ்ப்பாட்டு முதலில் பாடப்படுகிறது. மாணவர்களின் இவ் வெற்றிவிழா கூட்டம் அன்று மாலை தோழர் எ. நடேசன் தலைமையில் நடைபெற்றது.

o o

தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் மாகாண திராவிட மாணவர் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை முன்னிட்டு அன்னாரைப் பாராட்டி நீடாமங்கலத்தில் தோழர் என். எஸ். கோவிந்தராசலு அவர்கள் இல்லத்தில் 25-2-46ல் ஓர் விருந்து நடைபெற்று தோழர் சரவணன் தலைமையில் பாராட்டுக்கூட்டமும் நிகழ்ந்தது.

o o

வட ஆற்காடு திருப்பத்தூர் திராவிட மாணவர்களின் வேண்டுகோளின்படி 28-2-46ல் நடைபெற்ற திருப்பத்தூர் நகரசபை கூட்டத்தில் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் படத்தை நகரசபையில் திறந்து வைப்பதென முடிவு செய்யப்பட்டது.

3-3-46ல் சாத்தூக்குடியில் தோழர் தங்கப்பழம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாணவர் கூட்டத்தில் தோழர் சிந்தாமணிச்சம் அவர்களால் திராவிட மாணவர் கழகம் திறந்து வைக்கப்பட்டது.

o o

4-3-46ல் திருச்சி புத்தூர் பிஷப்ஹீபர் உயர்நிலைப்பள்ளி தமிழ்க் கழகச் சார்பில் தோழர் சு. எஸ். அரசியா, பி. ஏ. எல். டி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் "சம்சாரமும் கல்வியும்" என்பது பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்.

o o

24-3-46ல் திருவில்லிப்புத்தூர் தாலுக்கா சிவந்திபட்டியில் நாடார் உயர்தர ஆரம்ப பாடசாலையில் ஆசிரியர் பி. அப்பாத்துரை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் நித்தியானந்தத்தை தலைவராகக்கொண்ட திராவிடர் கழகம் அமைக்கப்பட்டது.

28-3-46ல் பரமத்தி வேலூரில் தோழர் கே. வெங்கடாசலம் தலைவராகவும், கே. ஆர். சுப்ரமணியன் செயலாளராகவும் கொண்ட திராவிட மாணவர் கழகம் நிறுவப்பட்டு 50 பேருக்குமேல் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்.

o o

31-3-46ல் நாகையில் தோழர் டி. பி. வேதாசலம் பி. ஏ. அவர்கள் தலைமையில் தோழர் இளம்வழுதி அவர்கள் திராவிட மாணவர் கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர் ஆர். தீனதயாளு தலைவராகக்கொண்ட நிர்வாகக்குழுவும் அமைக்கப்பட்டது.

---

20-3-46ல் தூத்துக்குடி தொழிலாளர் சங்கத்தின் முன் தோழர் எ. அய்யாச்சாமி தலைமையில் நடைபெற்ற திராவிடர் கழகக்கூட்டத்தில் தோழர்கள் எஸ். என். இராசன், எஸ். தங்கப்பழம், மதியழகன், மனோகரன் ஆகியோர் பல விஷயங்கள்பற்றிப் பேசினர். தோழர் பி. எஸ். சண்முகம் நன்றிகூறினார்.


## நூதன பாக்கட் ஸ்டவ் அடுப்பு

காப்பி, டீ, குழந்தைகளுக்குப் பால் போன்ற அவசரமாக காய்ச்சிக்கொள்ளக்கூடிய சிறிய அடுப்பு. கரி, எண்ணை தேவையில்லை. வண்டிபிரயாணம் முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொள்ளலாம். ஒரு தடவை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த விலை ரூ. 2-4-0.

நூ. சுப்பிரமணியம், 20 சீனிவாசஐயர் தெரு,
செல்வயல் ரோட்,
சம்பியம் போஸ்டு, மதராஸ்.

# இயக்கச் செய்திகள்

10-3-46ல் மதுரையில் பொன்னகரம் வெள்ளீர் வாய்க்கால் தெருவில் தோழர் மீ. தங்கராசு பி. ஏ. அவர்களாலும், கீழ மாசி வீதியில் தோழர் சோமுச்சனி அவர்களாலும் கொடியேற்றுவிழா நடைபெற்று மாலை அழகரடி திராவிடர் கழகச் சார்பில் தோழர் மு. இராசகோபால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் பு. ரா. மதிவாணன், செங்குட்டுவன், இராமானுசம், அய்யாச்சாமி, பண்டிட் முத்துச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

22-2-46ல் வாழ்நடை திராவிடர் கழகச் சார்பில் தோழர் சுப்பராயன் அவர்கள் தலைமையில் ஆசிரியர் பனையப்பா அவர்கள் திராவிடர் கழக பாடசாலையொன்று திறந்துவைத்தார்கள்.

o o

10-3-46ல் சிறுத்தொண்ட நல்லூர் திராவிடர் கழகச்சார்பில் தோழர் இரா. பாலராசு அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் இராமலிங்கம், தங்கப்பழம், நடராசன், சிவசங்கு ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் சிங்காரவேலு அவர்கள் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

o o

11-3-46ல் தெ. ஆ. மாவட்ட க. ச. படை மாநாட்டு வரவேற்பு கமிட்டிக் கூட்டம் குறிஞ்சிப்பாடியில் தோழர் சி. முனுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்று 7-4-46ல் மாநாடு நடத்துவது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

o o

9-3-46ல் சேலம் செவ்வாப்பேட்டை திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்று பல முடிவுகள் செய்யப்பட்டன.

o o

3-3-46ல் சென்னை 3வது டிவிஷன் திராவிடர் கழகத் திறப்புவிழாவும், கருஞ்சட்டைப்படை அணிவகுப்பும் வண்ணாரப்பேட்டை செயராம் நாடார் மைதானத்தில் நடைபெற்றது. தோழர் அ. ஏ. கபாலமூர்த்தி தலைமைவகித்தார். தோழர் தில்லைவில்லாளன் கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர் கே. வீரமணி கொடியேற்றினார். தோழர்கள் என். வி. நடராசன், ஏ. அர்பழகன், ஏ. பி. சனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் சிங்காரவேலு அவர்களின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. தோழர்கள் சி. கணேசம், எஸ். ஆர். சாண்டோ 100 பேர் கொண்ட கருப்புச்சட்டைப் படை அணிவகுப்பு ஒத்திகையை நடத்தினர். தோழர் அண்ணாமலை வணக்கங்கூறினார்.

o o

5-3-46 அன்று மாலை மணி 5க்கு திருத்துறைப் பூண்டியில் இரயிலடித் தெருவிலிருந்து கருப்புச்சட்டை வீரர்களும் மாணவர்களும் கலந்த ஒரு பெரிய ஊர்வலம் புறப்பட்டு நேரே பஞ்சாயத்துப் போர்டு நிலையத்திற்குச் சென்றது. ஆங்கு பஞ்சாயத்துப்போர்டின் சார்பாக தோழர் அண்ணாதுரைக்கு ஒரு வரவேற்பு வாசித்தளிக்கப்பட்டபின், துணைத்தலைவர் எஸ். கே. அய்யா அவர்களின் தலைமையில் "பெரியார்" அவர்களின் படத்தை தளபதி அண்ணாதுரை திறந்துவைத்தார். திறப்புவிழா முடிந்தபின் நேரே பொதுக்கூட்டம் நடக்கும் இடத்திற்கு ஊர்வலம் சென்றது. நகரில் பல இடங்களில் இயக்கக் கொடி ஏற்றப்பட்டது. தோழர் பி. எஸ். மணியம் தலைமையில் தளபதி அண்ணாதுரையவர்கள் உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினார். நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

o o

திருவத்திபுரம் திராவிட இளைஞர் கழகத்தார் இவ்வூர் பஞ்சாயத்து போர்டு பொது வாசகசாலைக்கு "குடி அரசு" "பகுத்தறிவு" வெளியீடுகளில் எழுபதை இனாமாக 29-6-45ல் கொடுத்தனர். பார்ப்பனரைத் திட்டும் புத்தகம் என்று சொல்லி இதுவரை அதை வைக்காது காலந்தள்ளி வந்தனர். இது குறித்து இன்ஸ்பெக்டர் ஆப்லோகல் போர்டுக்கு எழுதி, அவர் 8-2-46ல் மேற்படி புத்தகங்களை எடுத்து வைத்துக்கொள்ளும்படி உத்திரவிட்டதின்பேரில் 27-2-46ல் கூடிய டி போர்டின் கூட்டத்தில் டி புத்தகங்களை போர்டார் ஏற்றுக்கொண்டனர் என்று திருவத்திபுரம் திராவிடர் கழகச் செயலாளர் மா. நா. இராசமாணிக்கம் தெரிவிக்கிறார்.

o o

திருவத்திபுரத்தில் 9-12-45ல் நிகழ்ந்த வடார்க்காடு மாவட்டத் திராவிடர் கழக மாநாட்டின்போது, ஊர்வலம் வந்த காலை காங்கரஸ் கட்டட வேட்டதாரிகள் குறுக்கே கட்டியிருந்த பெரிய கொடி ஒன்றை பலர் அவிழ்க்கச் சொல்லியும் கேட்காது போகவே, கருஞ்சட்டைத் தொண்டர் தோழர் சோமசுந்தரம் என்பவர் அக்கொடியை அறுத்துவிட்டார். மேற்படி தோழர்மீது காங்கரசார் தொடுத்திருந்த வழக்கை இவ்வூர் சப்மாஜிஸ்டிரேட் போதிய சாட்சியம் இல்லையெனத் தள்ளிவிட்டார் என்று திருவத்திபுரம் திராவிடர் கழகச் செயலாளர் தெரிவிக்கிறார்.

## செல்வம் நினைவு நாள்

10-3-46ல் விக்டோரியா மார்க்கட் மைதானத்தில் பேளுக்குறிச்சி மிட்டாதார் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பெற்று தோழர்கள் குழந்தைசாமி, ஆர். நடேசன், எ. சித்தையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

20-3-46ல் பட்டுக்கோட்டை தபாலாபீசுக்கு எதிரில் தோழர் சி. நா. விசுவநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரியத்தால் அருஞ்சிறைபட்டு மீண்ட தோழர் ப. ரெ. சாமிநாதன் அவர்களுக்குப் பல கழகங்களின் சார்பில் வரவேற்பு நிகழ்ந்தபின், மறைந்த வீரர் செல்வம் அவர்களின் சேவையைப் பாராட்டி தோழர்கள் காளியப்பன், பாவலர் பாலசுந்தரம், கே. கே. நீலமேகம், எ. பி. சனார்த்தனம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

31-3-46ல் விருதுநகர் க. ச. படை சார்பில் தோழர் முருகையா தலைமையில் சர் செல்வம் நினைவுநாள் கூட்டம் நடந்தது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

o o

10-3-46ல் தாராபுரம் திராவிடர் கழகச் சார்பில் பழயகோட்டை இளைய பட்டக்காரர் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டு தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். இ. பாலகுரு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.


## தன்மானத் தாலாட்டு

ஆக்கியோர்:- புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
திருவத்திபுரம் மாவண்ணா தேவராசன்

விலை 0-2-6 தனிப்பிரதி வேண்டுவோர் 0-3-3 தபால் தலை அனுப்பவும்.
வியாபாரிகளுக்கு தக்க கழிவு தரப்படும்.

குறிப்பு:- மாவண்ணா தேவராசன் எழுதிய இன எழுச்சிப்பாக்கள் கிடைக்கும். தனிப்பிரதி 0-3-0. விபரங்கட்கு:-


Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilas